# புராதன தமிழ் நகரங்கள்

***மு. கயல்விழி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம்

**மலர்: 4**

**இதழ்: 2**

**மாதம்: அக்டோபர்**

**வருடம்: 2019**

**ISSN: 2454-3993**

***முன்னுரை***

நகரங்கள் ஒரு நாட்டின், ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியை அளவிடும் கருவிகளாகும். நகரங்கள் பண்பாட்டின் உறைவிடங்களாகத் திகழ்ந்தன. உலகின் பல்வேறு நாட்டு மக்கள் தம் நாட்டின் புராதன நகரங்களின் பெருமையை எண்ணிப் பெருமிதம் கொள்ளுதல் வழக்கு. ஐரோப்பியர்கள் புராதன கிரேக்கத்திலுள்ள ஏதேன்ஸ், ஸ்பார்டா கொரிந்த், தீப்ஸ், மிலிந்த், ரோமாபுரியில் உள்ள ரோம் (Rome) போன்ற நகரங்களை எண்ணிப் பெருமை கொள்ளுதலை ஈண்டு எண்ணிப் பார்க்கலாம். நகரங்கள் நாகரிகமடைந்த சமூகத்தின் வெளிப்பாடு, உன்னத பண்பாட்டின் உறைவிடங்கள்.

பழமையும், பெருமையும் ஒருங்கே கொண்டது தமிழகம். ஐரோப்பிய பண்பாடு தோன்றுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் பண்பாட்டுத் துறையில் முன்னோடிகளாய்த் திகழ்ந்தனர். அவர்கள் பல நகரங்களை நிறுவி நாகரிகத்தை வளர்த்தனர். சங்க காலத்துக்கு முன்பே பல நகரங்கள் தமிழகத்தில் சிறந்து விளங்கின. அவை தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் பரவிக்கிடந்தன. அவற்றின் புகழ் இந்தியா மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் பரவியிருந்தன. ஐரோப்பிய நகரங்கள் குறித்து மேற்கோள்ளப்பட்ட ஆய்வுகள் போன்று நம் தமிழ் நகரங்கள் குறித்து ஆய்வுகள் இதுவரை மேற்கோள்ளப்படவில்லை. எனவே அவை குறித்து ஈண்டு ஆய்வோம்.

***உறையூர்***

உறையூர் சோழர்களின் தலைநகராய்த் திகழ்ந்தது. இது திருச்சி மாவட்டத்தில் காவிரி நதியின் தென்கரையில் திருவரங்கத்துக்கு (Srirangam) அருகில் அமைந்திருந்தது. சங்ககாலத்தில் 'உறந்தை' என்றும் "ஆர்க்காடு" என்றும் இது அழைக்கப்பட்டது1.

***"மறம் கெழு சோழர் உறந்தை அவையத்து"***

***(புறநானூறு- பாடல்:39 வரி:8)***

“வாரணம்” “குக்குடம்” என்றும் இதற்கு வேறு பெயர்கள். அயல்நாட்டுப் பயணிகள் பெரிப்புளுஸ் இந்நகரை “அர்காரூ” (Argaru) என்றும் தாலமி “ஓர்தரவு” (Ortheura) என்றும் அழைக்கின்றனர். கி.பி. 200 இல் வாழ்ந்த பதஞ்சலி முனிவர் இந்நகரை “உறகபுரி” என்கின்றார். அத்திமரங்கள் நிறைந்த பகுதியாதலால் ஆர்க்காடு என்றும் அழைக்கப்பட்டது. தாலமி இதையே “சோரையரின் தலை நகராய் அர்காடஸ் (Arkatus) திகழ்ந்தது” என்கின்றார். “சோரையர்” என்றால் சோழர்கள், “அர்காடஸ்” என்றால் ஆர்க்காடு. “கோழி” என்பதும் இதற்கு மற்றொரு பெயர். இங்கு கோழி ஒன்று யானையைப் போரில் வென்றதால் இப்பெயர் பெற்றது.

**“கோழியோனே கோப்பெருஞ் சோழன்”**

**(புறநானூறு பாடல்-212 வரி:8)**

**“கோழி உயர்நிலை மாடத்து”**

**(புறநானூறு பாடல்-67 வரி:9)**

பங்குனி உத்திரத் திருவிழா இந்நகரில் சிறப்புடன் கொண்டாடப்பட்டது.

இந்நகரில் மெல்லிய ஆடைகள் நெய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டன. பெருங்கிள்ளி என்ற சோழ மன்னன் பத்தினி தெய்வம் கண்ணகிக்கு இந்நகரில் கோயில் அமைத்தான்.கரிகால் சோழன் இந்நகரைப் புதுப்பித்தான்.

**“செல் குடி நிறுத்த பெரும் பெயரிக் கரிகால்**
**வெல் போர்ச் சோழன் இடையாற்று அன்ன”**

**(அகநானூறு பாடல்:141 வரிகள்:22-23)**

இளம்பொன் வணிகன், ஏணிச்சேரி முடமோசியார், கதுவாய் சாத்தான், சல்லியன் குமரன், சிறுசாத்தான், பலகாயன், முதுகண்ணன் சாத்தான், முதுகொற்றன் போன்ற புலவர்கள் இந்நகரைச் சிறப்பித்தனர். புகழ்ச்சோழ நாயனார், திருப்பாணாழ்வார் போன்றோர் இந்நகரைச் சார்ந்தவர்களே.

**காவிரிப்பூம்பட்டினம்**

காவிரிப் பூம்பட்டினம் சோழர்களின் துறைமுக நகராகும். நாகப்பட்டினம் மாவட்டத்தில் காவிரி நதி கடலில் கலக்குமிடத்தில் இஃது அமைந்திருந்தது. புகார், பும்புகார், சம்பாதி, காகந்தி, சோழப்பட்டினம் என்று இது அழைக்கப் பட்டது. கி.மு. 2ஆம் நூற்றாண்டில் இந்தியா போந்த “பெரிப்புளுஸ்” என்ற கிரேக்க மாலுமி இந்நகரை “காமரா” (Gamara) என்று குறிப்பிடுகின்றார். எகிப்து நாட்டைச் சார்ந்த பயணியான “தாலமி” என்பார் இந்நகரை “கபேரிஸ் எம்போரியன்” (Kaberis Emporion) என்று குறிப்பிட்டுச் சென்றுள்ளார். பட்டினப்பாலையில் கடியலூர் உருத்திரங்கண்ணனார் இந்நகரைப் புகழ்ந்து பாராட்டுகின்றார். இதுதவிர மிலிந்தபன்னா, அபிதம்மவதாரம், புகோறைவகடகதா, பௌத்த சாதக கதைகள் போன்ற வடமொழி நூல்களும் பூம்புகாரைப் பற்றி குறிப்பிடுகின்றன. புத்ததத்தர் என்ற பௌத்த துறவி புகாரில் உள்ள இந்திர விகாரையிலிந்து தன்னுடைய “அபிதம்மவதாரம்” என்ற நூலை கி.பி.450ல் இயற்றினார்.

காவிரிப்பூம்பட்டினம் நிர்வாக வசதிக்காக பட்டினப்பாக்கம், மருவூர்ப் பாக்கம் என்று இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மேலும் இது மிகுந்த கட்டுக்காவல் உடைய நகராகவும் திகழ்ந்தது. இங்கிருந்து சீனா, அரேபியா, ரோமாபுரி, கிரேக்கம், கடாரம் போன்ற நாடுகளுடன் வணிகம் இரவு, பகலாய் நடைபெற்றது. பூம்புகார் நகரைப் புகழ் பெற்ற சோழ மன்னர்களான இளங்சேட் சென்னி, கரிகாலன். நலங்கிள்ளி போன்றோர் ஆண்டனர். கரிகாலன் இந்நகரில் தங்கி அரசாண்ட செய்தியைச் சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையில் குறிப்பிடுகின்றார்.

**"மன்னன் கரிகால் வளவன் நீங்கிய நாள்**
**இந்நகர போல்வுது ஓர் இயல்பினது ஆகிப்**
**பொன்னகர் வறிதாப் போதுவர் என்ப"**
***(மணிமேகலை- விழாஅறை காதை வரிகள்:39-41)***

இது தவிர கண்டரதத்தனார், சேங்கண்ணணார், நப்புதனார், காரிக்கண்ணனார், சேந்தன் கண்ணனார் போன்ற சங்கப் புலவர்கள் இந்நகரைச் சிறப்பித்தனர். இயற்பகைநாயனார், திருவெண்காடர் போன்ற நாயன்மார்களும் இந்நகரைச் சார்ந்தவர்களே. இந்நகர் கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கடற்கோளால் அழிவுற்றது.

### அரிக்கமேடு

அரிக்கமேடு சோழர்களுடைய தலை சிறந்த துறைமுகப்பட்டினமாகும். இது பாண்டிசேரிக்கு அருகில் அரியாங்குப்ப ஆறு கடலில் கலக்குமிடத்தில் கழிமுகப் பகுதில் அமைந்திருக்கின்றது. தொல்லியலாளர் திரு மார்டிமர் வீலர் அவர்கள் கி.பி.1948ல்இந்நகரைக் கண்டெடுத்தார். இதை "பொதுகே" (Poduke) என்று தாலமியும், "பொதுகா"(Poduka) என்று பிளினியும் குறிப்பிடுகின்றனர். கி.மு.இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி.இரண்டாம் நூற்றாண்டு வரை இந்நகர் செழித்திருந்தது என்று ஆய்வாளர்கள் கணிக்கின்றனர். இது காவிரிப் பூம்பட்டினத்திற்கும் மரக்காணத்திற்கும் இடையே துறைமுக நகராய் அமைந்திருந்தது.

ரோமனியர்களுடன் சோழர்கள் இந்நகரத்தின் மூலமாகவே வாணிகம் புரிந்தனர். கிரேக்க மற்றும் ரோமானியர்களின் மதுவகைகள் இங்கு இறக்குமதி செய்யப்பட்டு தமிழகம் முழுவதும் விற்பனை செய்யப்பட்டன.

**"யவனர் நன கலம் தந்த தண் கமழ் தேறல்**
**பொன்செய் புனை கலத்து இயந்தி"**
***(புறநானூறு பாடல்-56 வரிகள்:18-19)***

ரோமப் பேராசர் அகஸ்டஸ் சீசர் (கி.மு.63-14) காலத்து நாணயங்கள் இங்கு கிடைத்திருப்பதின் மூலம் ரோமானியருடைய வணிகத் தொடர்பு உறுதியாகின்றது. இங்கு துணிநெய்தல், மண்பானை வனைதல், மணிவகைகள் செய்தல், சங்கு வளையல் செய்தல், உருக்கு ஆலைகள் போன்ற தொழிற்கூடங்கள் நிறைந்து காணப்பட்டன. சாய ஆலைகள் நிறைந்த நகராகவும் இது திகழ்ந்தது.

### ஏயிர்பட்டினம்

ஏயிர்பட்டினம் தற்போது விழுப்புரம் மாவட்டத்தில் மரக்காணம் என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. கிழக்கு கடற்கரையில் அமைந்த சிறந்த துறைமுக நகரமாய்த் திகழ்ந்தது.

**"மணி நீர் வைப்பு மதிலோடு பெயரிய**
**பணி நீர்ப்படுவின் பட்டினம் படரின்"**
***(சிறுபாணாற்றுப்படை வரிகள்:152-53)***

பெரிப்புளுஸ் என்பார் இந்நகரை "சோபட்மா" (Sopotma) என்று குறித்துச் செல்கின்றார். சிறுபாணாற்றுப்படைக்கு உரை வகுத்த நச்சினார்க்கினியர் இந்நகரை "எயிர்பட்டினம்" என்றே குறிக்கின்றார். மதில்கள் சூழ்ந்த பட்டினமாதலால் "மதிற்பட்டினம்" அல்லது "சோபட்டினம்" என்றும் பெயர் பெற்றது. இது சோழர்காலத்தில் "மணற்காணம்" என்றும், விஜயநகர மன்னர் காலத்தில் "மரக்காணம்" என்றும் அழைக்கப்பட்டது. இங்கு அகில் அதிகஅளவில் சாவகத்தீவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது.

**"ஓங்கு நிலை ஒட்டகம் துயில் மடிந்தென்ன**
**வீங்கு திரை கொணர்ந்த விரைமர விறகின்"**
***(சிறுபாணாற்றுப்படை வரிகள்:154-55)***

இதுதவிர குதிரைகளும், வடஇந்திய விளைப்பொருட்களும் இறக்குமதி செய்யப்பட்டன. இங்கு மிகப் பெரிய கலங்கரை விளக்கம் இருந்ததை இலக்கியங்கள் உறுதிசெய்கின்றன.

**"ஏணி சாத்திய ஏற்று அருந்சென்னி**
**விண்பொர நிவந்த வேயாமாடத்து**
**இரவில் மாட்டிய இலங்கு சுடர்ஞெகிழி**
**உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்"**
***(பெரும்பாணற்றுப்படை வரிகள்: 326-29)***

**கொடுமணல்**

கொடுமணல் ஈரோடு மாவட்டத்தில் சென்னிமலை வட்டத்தில் அமைந்துள்ளது. சேர மன்னர்களுடைய தலைசிறந்த தொழில்நகரமாகவும், வணிகத்தலமாகவும் இது திகழ்ந்தது. "கொடுமணம்" என்று சங்க இலக்கியங்கள் இந்நகரைச் சிறப்பிக்கின்றன.

**"கொடுமணம் பட்ட வினை மாண் அருங்கலம்**
**பந்தர்ப் பயந்த பலர் புனழ் முத்தம்"**
***(பதிற்றுப்பத்து எட்டாம் பத்து- பாடல் -4, வரிகள்:5-6)***

இது நொய்யலாற்றங்கரையின் வட கரையில் அமைந்திருந்தது. இரும்பு பொருட்கள் மற்றும் அரியமணிகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இங்கு நிறைந்திருந்தன.[3] இங்கிருந்து குதிரைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. அயல் நாடுகளான ரோம் மற்றும் எகிப்து நாடுகளுடன் சிறந்த முறையில் ஏற்றுமதி, இறக்குமதி வணிகம் நடைபெற்றது.

**"கொடுமணம் பட்ட நெடுமொழி ஒக்கலோடு**
**பந்தர் பெயரிய பேர் இசை மூதூர்**
**கடன அறி மரபின் கைவல் பாண!**
**தென் கடல் முத்தமோடு நன் கலம் பெறுகுவை"**
***(பதிற்றுப்பத்து ஆறாம் பத்து, பாடல்-7 வரிகள்: 1-4)***

இது சங்க காலத்தில்தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுடன் பெருவழிகள் முலம் சிறப்பான முறையில் இணைக்கப்பட்டிருந்தது.

**வஞ்சிமாநகர்**

வஞ்சிசேரர்களின் தலைநகராகும் இது "வஞ்சி மூதூர்" என்று சிறப்புடன் அழைக்கப்பட்டது. இதற்கு கருவூர் என்பது மற்றொரு பெயர். இதை "புவாவஞ்சி" என்றும் அழைத்தனர். வடநாட்டவர் இந்நகரை "மாரீசிப் பட்டினம்" என்று அழைத்தனர். இது முசிறி துறைமுகத்திற்கு கிழக்கே பெரியாற்றின் வடகரையில் அமைந்திருந்தது. கேரளாவில் இன்றுள்ள "கருர் பட்டினமே" பழைய வஞ்சி என்று சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். வேறு சிலர் கேரளாவில் இன்றுள்ள "திருவஞ்சிக்களம்" என்ற ஊரே பழைய வஞ்சி என்றும்கருதுவர். இளங்கோவடிகள் இந்நகரை "வள வஞ்சி" "வஞ்சி மூதூர்" "பேரிசை வஞ்சி" "வஞ்சி மாநகர்" என்றெல்லாம் புகழ்கின்றார்.

**"பேரிசை வஞ்சி மூதூர்ப் புறத்துப்"**
***(சிலப்பதிகாரம், நடுகல்காதை, வரி:196)***
**"வஞ்சி மூதூர் மாநகர் மறுங் கில்"**
***(சிலப்பதிகாரம் - வரம்தரு காதை வரி:127)***

இங்கு வழக்குரை மன்றம், பூதியில் சதுக்கம், செய்குன்று, பூங்காக்கள், அறச் சாலைகள் நீர்நிலைகள் மட்டுமல்லாமல், சிவன் கோவில், திருமால் கோவில், பௌத்த, சமணப் பள்ளிகளும் காணப் பட்டன.

**"மன்றமும் பொதியிலுஞ் சந்தியுஞ் சதுக்கமும்**
**புதுக்கோல் யானையும் பொற்றார்ப் புரவியும்**
**கதிக்குற வடிப்போர் கவின்பெறு வீதியும்**
**சேணோங் கருவி தாழ்ந்த செய் குன்றமும்**
**வேண்வர் மிகுக்கும் விரைமரக் காவும்**
**விண்ணவர் தங்கள் விசும்பிட மறந்து**
**நண்ணுதற் தகாத்த நன்னீரடங்களும்**
**சாலையும் கூடமுந் தமனியப் பொதியிலும்"**
*(மணிமேகலை, கச்சி மாநகர் புக்க காதை, வரிகள்:59-66)*

சேரமன்னர் அரசவைக்கு வேத்தியல் மண்டபம் என்று பெயர். அரண்மனைக்கு அருகிலேயே வெள்ளி மாடமும், இளவந்திகைச்சோலையும்காணப்பட்டன. இதன் அருகிலேயே கண்ணகிக்கு கோவிலாம் பத்தினிக்கோட்டம் அமைந்திருந்தது. அதனருகில் அரசு மாளிகையான வேள் ஆவிக்கோ மாளிகை காணப் பட்டது. இது அரசு விருந்தினர் தங்கும்

மாளிகையாக இருந்திருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுவர். கோட்டைக்கு வெளியே புற நிலைக்கோட்டம் என்ற கோவில் காணப்பட்டது. இக்கோயில் ஆன் பொருனை ஆற்றின் கரையில் அமைந்திருந்தது.

### தொண்டி (கேரளா)

தொண்டி மேலைக் கடற்கரையில் (கேரளாவில்) அமைந்திருந்த சிறந்த துறைமுகமாகும். பல சேர மன்னர்களுக்கு இஃது தலைநகராகத் திகழ்ந்தது.

**“தோளும் கூந்தலும் பல பாராட்டி**
**வாழ்தல் ஓல்குமோ மற்றே செங்கோற்**
**குட்டுவன் தொண்டியன்ன”**
***(ஐங்குறுநூறு பாடல்-178 வரிகள்:1-3)***

பெரிப்புளுஸ் என்பார் இந்நகரைக் கண்டு பாராட்டி இதை “திண்டிஸ்” (Thindis) என்று குறிப்பிடுகின்றார். இங்கு அயல் நாட்டு வணிகம் நன்கு செழித்துக் காணப்பட்டது. மிளகு போன்ற வாசனைப்பொருள்கள் அதிக அளவு மேலைநாடுகளுக்கு எற்றுமதி செய்யப்பட்டன. பல சங்க இலக்கியங்கள் இந்நகரைப் பாராட்டுகின்றன.

**“கொழுமீன் தடியொடு குறுமகள் கொடுக்கும்**
**திண் தேர்ப பொறையன் தொண்டி அன்ன எம்”**
***(அகநானூறு பாடல்-60 வரிகள்:6-7)***

**“திண்தேர்ப் பொறையன் தொண்டி முன் துறை”**
***(குறுந்தொகை பாடல்-128 வரி:2)***

**“வெண்கோட்டு யானை விறற்போர் குட்டுவன்**
**தண்டிரைப் பரப்பின் தொண்டி”**
***(அகநானூறு பாடல்-290வரிகள்:12-13)***

இது இன்று கேரளாவில் பொன்னானி என்ற பெயருடன் அழைக்கப்படுகின்றது.

### தொண்டி(தமிழ்நாடு)

இத்தொண்டி நகர் பாண்டிய நாட்டுத் துறைமுகமாகும். இது கீழைக் கடற்கரையில் அமைந்திருந்து. இன்றைய இராமநாதபுரம் நகருக்கு அருகில் இது அமைந்திருந்தது. கிழக்கிந்திய தீவுகளில் இருந்து அகில், சந்தனம், பட்டு, சாதிக்காய், இலவங்கம், குங்குமப்பூ, கற்பூரம் போன்றவை இறக்குமதி செய்யப்பட்டு மதுரைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

**“ஆங்க தன்றியும் ஓங்கிடும் பரபிபின்**
**வங்க ஈட்டத்துப் தொண்டியோ ரிட்ட**
**அகிலும் துகிலும் ஆரதுத் வாசமும்**
**தொகுகருப் புரமும் சுமந்து வந்த**
**கொண்டலொடு புகுந்து கோமன் கூடல்”**
***(சிலப்பதிகாரம்-ஊர்காண் காதை***
***வரிகள்:106-112)***

கொற்கையைப் போன்றே இந்நகரின் சிறப்பு காரணமாய் பாண்டிய இளவரசர்கள் இங்கிருந்து இந்நகரை நிர்வகித்தனர்.

### முசிறி

முசிறி சேரர்களின் மற்றோரு துறைமுக நகராகும். இந்நகர் நொய்யலாற்றங்கரையில் அமைந்திருந்தது. சிறப்பான வணிகத் துறைமுகமாய்த் திகழ்ந்தது. வால்மீகி இராமாயணத்தில் இது “முரசி பந்தனம்” என்றும், அர்த்த சாத்திரத்தில் “சௌர்ணேயம்” என்றும் சிறப்பிக்கப்படுகின்றது. வடமொழியில் இது “மிசிரிப் பட்டினம்” என்று அழைக்கப் பட்டது. பிளினி என்ற ரோமானிய பயணி இந்நகரை “முஸிரிஸ்” (Muzuris) என்று குறிப்பிடுகின்றார். இதை “கலோபோத்ராஸ்” (Calobothras) என்பவன் ஆண்டதாகவும் அவர் குறிப்பார்.இங்கு இடையறாது உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் நடைபெற்றது. முசிறி துறை முகத்துடன் அலெக்சாண்டரியாவின் வணிகர்கள் சிறப்புடன் வணிகம் செய்தனர். அரேபியர் பொன் கொடுத்து மிளகை விலைக்கு வாங்கிச்சென்றனர்.

**“யவனர் தந்த வினைமான் நன்கலம்**
**பொன்னோடு வந்து கறியோடு பெயரும்**
**வளம் கெழு முசிறி”**
***(அகநானூறு பாடல்-149, வரிகள்:8-11)***

முசிறித் துறைமுகம் ஆழமற்றது. எனவே பொருள்கள் கரைக்கு எடுத்துவர தோணிகள் பயன்படுத்தப்பட்டன.

**"கலம் தந்த பொற் பரிசம்**
**கழித் தோணியான் கரை சேர்க்கும்"**

**(புறநானூறு பாடல்-34 வரிகள்:5-6)**

முசிறியில் அரேபியர் தங்கிய பகுதி "பந்தர்" என்று அழைக்கப்பட்டது. இங்கு யவனர் தங்கிய யவனச் சேரியும் காணப்பட்டது.

முசிறியில் இருந்த ரோமானியர்கள் இங்கு ரோமவணிகம் செழிப்பதற்கு காரணமான அகஸ்டஸ் சீசர் (Juius Ceaser) என்ற அரசரின் கோவிலைக் கட்டினர்.[4] பாண்டியன் தலையானங்கானத்து செறுவென்ற நெடுஞ்செழியன், குட்டுவன் சேரல் என்ற சேரமன்னனை தோற்கடித்து இந்நகரைச் சூரையாடினான்.

**"அருஞ்சமம் கடந்து படிமம் வவ்விய**
**நெடுநல் யானை அடுபோர்ச் செழியன்"**

**(அகநானூறு பாடல்-149 வரிகள்:11-12)**

இந்நகர் இடைக்காலத்தில் முயிரிக்கோடு, மாக்கோதைப்பட்டினம் என்று அழைக்கப்பட்டது. கி.பி. 1341 இல் பெரியாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாய் இந்நகர் அழிவுற்றது. இப்பகுதி இன்று கிரங்கனூர் என்று அழைக்கப்படுகின்றது.

## மதுரை

மதுரை இந்தியாவின் பழமையான நகரங்களில் ஒன்று. சங்க காலத்தில் "கூடல் மாநகர்" என்றும் அழைக்கப் பட்டது. கபாடபுரமும், தென்மதுரையும் கடல்கோளால் அழிந்தபின் இந்நகர் பாண்டியரின் தலைநகராகத் திகழ்ந்தது. முடத்திருமாறன் என்ற பாண்டிய மன்னன் மதுரையை உருவாக்கினான் என்று கருதப்படுகின்றது. கி.பி.200ல் வாழ்ந்த பதஞ்சலி இந்நகரை "மதுராபுரி" என்றழைகின்றார். தாலமி "மொதொரா" (Modura) என்றும், சங்ககாலக் கல்வெட்டுகள் "மதிரை" என்றும் இந்நகரைக் குறிப்பிடுகின்றன. பிளினி, ஸ்டிராபோ, பெரிப்புளூஸ், மெகஸ்தனிஸ் போன்ற அயல்நாட்டு பயணிகள் இந்நகரைப் பாராட்டுவர்.

மதுரை மாநகர் வைகையின் தென்கரையில் இருந்தது. இது தாமரை வடிவில் அமைக்கப்பட்டிருந்தது.பழைய மதுரை இன்றைய மதுரைக்கு தெற்கிலும் திருப்பரங்குன்றத்துக்கு கிழக்கிலும் அமைந்திருந்தது.

**"கொடிநுடங்கு மறுகின் கூடற் குடாஅது**
**பல்பொறி மஞ்சை வெல்கொடி உயரிய**
**ஓடியா விழவின் நெடியயொன் குன்றத்து"**

**(அகநானூறு பாடல்-149 வரிகள் - 14-16)**

இது மிகப் பெரிய மதில் சூழ்ந்த நகராய்த் திகழ்ந்ததுடன் யவனர்கள் காவல் புரியும் சிறப்பினையும் பெற்றது. நகரின் நடுவே பாண்டியரின் அரண்மனை காணப் பட்டது. மதுரை நகரில் உய்யாவனம் என்ற அரசரின் நந்தவனம் காணப் பட்டது. மதுரையில் இருந்த புறஞ்சேரியில் ஆயர்கள் வசித்து வந்தனர். அகன்ற தெருக்களும், பெரிய அரண்மனையுமே மதுரையின் சிறப்பு. அமைச்சர் முதலிய அரசு அலுவலர் வாழ்ந்த தெருக்களும், பல்வகை வீரர்கள் வாழ்ந்த தெருக்களும், வணிகர் அங்காடிகளும், தொழிலாளர் தெருக்களும், நுண்கலை வல்லுனர் தெருக்களும் இந்நகரில் அமைந்திருந்தன. மேலும் அறம்கூரவையமும், சோறிடும் சாலைகளும் இங்குக் காணப்பட்டன.

## கொற்கை

கொற்கை "கொற்கை மாநகர்" என்று சிறப்புடன் அழைக்கப்பட்டது. இது திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி நதிக்கரையில் அமைந்திருந்தது. இதுபாண்டியரின் துறைமுக நகரமாய்த் திகழ்ந்தது. தாலமி

என்ற வெளிநாட்டுப் பயணி இந்நகரை "கொற்கே" (Korkey) என்றும், பெரிப்புளுஸ் இந்நகரை "கொல்கி" (Colchi) என்றும் அழைக்கின்றனர். கொற்கை தாமிரபரணி நதிக்கரையில் அமைந்திருந்தது என்று கிபி 150 இல் இந்தியா போந்த எகிப்து நாட்டு பயணியான தாலமியும் (கி.பி.100-கி.பி.170) குறிப்பிட்டுள்ளார். அவர் "சோலன்" (Solan) நதிக்கரையில் "கொற்கே" (Korkei) அமைந்துள்ளது என்று குறிப்பிடுகின்றார். சோலன்நதி என்பது தாமிரபரணி நதியாகும், கொற்கே என்பது கொற்கையாகும்.

தாமிரபரணி நதிக்கரையில் அமைந்திருந்த கொற்கையில் முத்தெடுக்கும் தொழில் சிறப்பாக நடைபெற்றது இந்நகர் முத்துக் குளித்தலுக்குப் பெயர்போனது. கொற்கையின் முத்துக்கள் உலகப் புகழ் பெற்றவை. கொற்கையின் முத்துக்கள் யாவும் வெண்நிறத்தை உடையன என்று ரோம் நாட்டு பயணியான பிளினியும் சான்று பகர்கின்றார்.[5] இங்கிருந்து அரசாண்ட பாண்டியமன்னர்கள் "கொற்கைப் பாண்டியர்" என்று அழைக்கப்பட்டனர்.

**"கொற்கைக் கோமான் கொற்கை**
**அம் பெருந்துறை"**

**(ஐங்குறுநூறு பாடல்-188 வரி:2)**

சங்ககாலத்தில் மிகப்பெரிய முத்துச் சந்தை இங்குக் காணப்பட்டது. இம்முத்துக்கள் ரோமாபுரி, பாபிலோன், சுமேரியா, எகிப்து போன்ற அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இங்குக் கிடைத்த ரோம நாணயங்கள் அகஸ்டஸ் (Augustus கி.மு..27) மற்றும் அலேக்சாண்டர் செவரஸ் (Alexander Severus கி.பி.235) ஆகியோர் காலத்தவை. இந்த வெண்முத்துக்கள் ரோம்நகர பெண்களின் அழகுக்கு மெருகூட்டியன. எகிப்து நாட்டிலும் கொற்கை முத்துகளுக்கு மிகுந்த வரவேற்பு கிட்டிற்று. உலகப் பேரழகி கிளியோபட்ராவின் (கி.மு.69-கி.மு.30) அழகு காதுகளையும், எழில் கழுத்தையும் இம்முத்துக்களே அலங்கரித்தன. இதுதவிர எகிப்து தெய்வங்களுக்கும் முத்தணியில் அலங்காரம் நிகழ்த்தப்பட்டது.

### அழகன்குளம்

அழகன் குளம் இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. வைகை நதிக்கரையில் அமைந்த சங்க காலப் பாண்டியரின் தலைசிறந்த துறைமுக நகராகவும், முதன்மை வணிகத் தலைமையிடமாகவும் திகழ்ந்தது. வைகை நதி வங்கக்கடலில் கலக்குமிடத்தில் இந்நகர் அமைந்திருந்தது.தாலமி இந்நகரை "சாலியுர் எம்போரியம்" (Saliyur Emporium) என்று புகழ்கின்றார். சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் "ஊனூர்" மற்றும் "மருங்கூர் பட்டினம்" அழகன் குளத்தையே குறிப்பிடுவதாக ஆய்வாளர்கள் கருதுவர். இது மருங்கை என்றும் அழைக்கப்பட்டது.

**"கடிமதில் வரைப்பின் ஊணூர் உம்பர்**
**விழுநதி துஞ்சும் வீறுபெறு திருநகர்**
**இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினத்து"**

**(அகநானூறு பாடல்-220 வரிகள்:12-13)**

பாண்டியருடைய துறைமுக நகராகத் திகழ்ந்ததுடன், பெரும் செல்வம் கொழித்த நகராகவும் இது திகழ்ந்தது. இந்நகரில் பெரிய அங்காடித் தெரு காணப்பட்டது. இந்நகருக்கு நெல்லூர் என்றும் பெயர். இதன் ஒரு பகுதி ஊனூர் ஆகும். இங்கு இடைவிடாது மேல்நாடுகளிலிருந்து பொருள்கள் இறக்குமதி செய்யப் பட்டன. மேலும் இலக்கியங்கள் கூறும் "நெல்லியனூறும்" இந்நகரின் ஒரு பகுதியே.

**"சீர் சான்ற உயர் நெல்லின்**
**ஊர் கொண்ட உயர் கொற்கை"**

**(மதுரைக் காஞ்சி வரிகள்:87-88)**

சில ஆய்வாளர்கள் இப்பகுதி பழம் தொண்டிக்கும் கொற்கைக்கும் இடையே அமைந்திருந்தது என்றும் கருதுவர். ஊனூர் நகரப் பகுதியாகவும், மருங்கூர் கடற்கரைப் பகுதியாகவும் திகழ்ந்தது.

ரோமானியருடன் மிகுந்த வணிகத் தொடர்பு இந்நகரிலிருந்து மேற்கொள்ளப் பட்டது. ரோமனியருடைய குடியிருப்புகளும் இங்கு நிறைந்திருந்தன. பாண்டியரின் முத்துக்கள் இந்நகரத்திலிருந்து மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இங்கிருந்து இலங்கை, தாய்லாந்து, சீனா, இந்தோனேசியா போன்ற நாடுகளுடன் வணிகத்தொடர்பு காணப்பட்டது. ரோம அரசர்கள் காலத்து நாணயங்கள் இங்கு கிடைத்திருப்பதன் மூலம் ரோமானிய வணிகம் செழித்திருந்தது நன்கு அறியப்படுகின்றது.

**கீழடி**

கீழடி சிவகங்கை மாவட்டத்தில் திருபுவனத்துக்கு அருகில் அமைத்திருந்தது. மதுரை மற்றும் அழகன்குளம் வணிகப்பாதையின் இடையே இது அமைந்திருந்தது. இது பாண்டியரின் முக்கியமான வணிகப்பட்டினமாய்த் திகழ்ந்தது. சங்க இலக்கியங்கள் இந்நகரை "பெருமணலூர்" என்று சிறப்புடன் குறிக்கின்றன. பல்வகை மணிகள் தயாரிக்கும் தொழிற்கூடங்கள் இங்கு நிறைந்து காணப்பட்டன. கிரேக்க மற்றும் ரோமானிய நாடுகளுடன் வணிகத்தொடர்பு சிறப்பான முறையில் நடைபெற்றது. இந்நகர் நன்கு திட்டமிட்டு கட்டப் பட்டிருந்ததுடன், மிகச் சிறந்த தொழிற் பட்டினமாயும் அக்காலத்தில் திகழ்ந்தது.

**காஞ்சிபுரம்**

காஞ்சிபுரம் இந்தியாவில் உள்ள பழம்பெரும் நகரங்களில் முதன்மையானது. "கச்சி" "கச்சிப்பேடு" என்றெல்லாம் பழம் காலத்தில் இது அழைக்கப் பட்டது. "திருவெஃகா" என்று இந்நகரை சங்க இலக்கியங்கள் அழைக்கின்றன. கி.பி.200 இல் வாழ்ந்த பதஞ்சலிமுனிவர் இந்நகரை "காஞ்சியுர்" என்றழைகின்றார்.[6] கி.மு.2ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பான்-கௌ என்ற சீனப் பயணி இந்நகரை "ஹௌ-ஆங்-டெக்" என்று குறிப்பிட்டுச் செல்கின்றார். காளிதாசன் என்ற மகாகவி இந்நகரை "நரசேசு காஞ்சி" என்று புகழ்கின்றார். யுவான் சுவாங் இந்நகரைக் கண்டு "கான்-சின்-பு-லோ" என்றழைக்கின்றார். மகாபாரதத்திலும், மார்கண்டேய புராணத்திலும் இந்நகர் குறித்துப் பேசப்படுகின்றது.

மௌரிய மன்னர் மகா அசோகரின்ஸ் தூபமும் இங்கு அமைக்கப்பட்டிருந்தது. புத்தபிரான், கரிகால் சோழன் போன்றோர் இந்நகருக்கு வருகைபுரிந்து சிறப்பித்தனர். இது தொண்டை நாட்டின் தலைநகராகத் திகழ்ந்தது. தொண்டைமான் இளந்திரையன் காலத்தில் இந்நகர் மிகவும் சிறப்படைந்தது. கரிகால் சோழனும் இந்நகரை சிறப்பு செய்தான் என்று பெரிய புராணத்தின் மூலம் அறியலாம். பாலாறு மற்றும் வேகவதி நதிக்கரையில் இந்நகர் அமைந்திருந்தது. இதன் புறநகர் பகுதியாக கச்சிப்பேடுதிகழ்ந்தது. பல சமயத்தவர் தொழும் கோயில்கள் இங்குக் காணப் பட்டன. பண்டு வேத, புத்த, சமண சமயங்கள் இந்நகரில் செழித்திருந்தன.

**குடந்தை**

குடந்தை கும்பகோணத்தின் ஒரு பகுதியாக இருந்தது. சோழ மன்னர்களின் பெரும் செல்வம் இங்கு குவித்து வைக்கப்பட்டிருந்தது.

> **"கொற்றச் சோழர் குடந்தை வைத்த**
> **நாடு தரு நிதியினும் செறிய"**
>
> ***(அகநானூறு பாடல்-60 வரிகள்:13-14)***

இந்நகரைச்சுற்றி பெரிய

கோட்டையும் காணப்பட்டது. இந்நகரில் சோழர்களின் பெரிய சிறைச் சாலையும் காணப்பட்டது. இதற்குக் குடவாயில் கோட்டம் என்று பெயர். சேரன் கணைக்கால் இரும்பொறை, சோழன் செங்கணன் என்பவனால் இங்கு சிறைவைக்கப்பட்டான். இந்நகருக்கு அருகே சோழநாட்டு பழையாறை என்ற நகர் இடைக்காலத்தில் தோன்றியது.

### மாந்தை

மாந்தை நகர் "துறைக் கெழுமாந்தை" "கடல்கெழுமாந்தை" என்று அழைக்கப் பட்டது.

**"இரை தேர் நாரை எய்தி விடுவிக்கும்**
**துறை கெழு மரந்தை அன்ன"**

***(நற்றிணை பாடல்-35 வரிகள்:6-7)***

**"ஆ புலம் புகுதரு பேர் இசை மாலைக்**
**கடல் கெழு மரந்தை அன்ன"**

***(நற்றிணை பாடல்-395 வரிகள்:8-9)***

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் இமயமலைவரை படையெடுத்துச் சென்று வெற்றி கொண்டுவந்த செல்வத்தை இந்நகரில் புதைத்து வைத்திருந்தான்.

### நறவு

நறவு சேரநாட்டைச் சார்ந்த துறைமுகமாகும். ஆடுகோட்பாட்டு சேரலாதன் காலத்தில் இந்நகர் சிறப்புற்றது. தாலமி இந்நகரை "நொளரா" என்று அழைப்பார்.நெல்சிடா என்று பெரிப்ளூஸ் என்பாரும் அழைக்கினறார். இதன் துறைமுகப்பகுதி பிகாரே (பொறக்காடு) என்றும் அழைக்கப்பட்டது. இங்கிருந்து படிகக்கற்கள், வைரம், நிலக்கல், காமாஞ்சி ல், மிளகு, இலவங்கப்பத்திரி போன்றவை கிரேக்கநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட் டன. புஷ்பராகம், துணிகள், நாற்பட்டு, நீலாஞ்சனம், பவளம், கண்ணாடி, பித்தளை, தகரம், ஈயம், மதுபானவகை கள், கோதுமை போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன.

### வசவசமுத்திரம் (நீர்பெயற்று)

நீர் பெயற்று நகர் கிழக்கு கடற்கரையில் அமைந்திருந்தது. வசவ சமுத்திரம் என்றும் இது அழைக்கப்படுகின்றது. இதுவே புகழ் பெற்ற மாமல்லபுரம் என்றும், சதுரங்கப் பட்டினம் என்றும் ஆய்வாளர்கள் மாறுபட்டுக் கருதுகின்றனர்.[7] சங்ககாலத்தில் குதிரைகளும், நுகர்ச்சிப் பொருட்களும் இங்கு இறக்குமதி செய்யப்பட்டன.

**"பாற்கேழ் வால்உளைப் புரவியோடு வடவனம் தரூஉம்**
**நாவாய் சூழ்ந்த தளிநீர்ப் படப்பை"**

***(பெரும்பாணற்றுப்படை வரிகள்: 20 -21)***

இது "பட்டினம்" என்று சிறப்புடன் அழைக்கப்பட்டது. இங்கிருந்த பரதவர் வாழ்விடங்களையும், கலங்கரை விளத்தையும் இலக்கியங்கள் புகழ்கின்றன.

### செங்கண்மா

செங்கண்மா ஜவ்வாது மலையில் தோன்றும் சேயாற்றங் கரையில் அமைந்திருந்து. இது செங்கம் என்று இக்காலத்தில் அழைக்கப்படுகின்றது. நன்னன் என்பவனின் தலைநகராக இந்நகர் திகழ்ந்தது. இந்நகரைச் சுற்றி பெரிய மதிலும், உள்ளே பெரியஅரண்மனையும் காணப்பட்டன.மக்கள் கூட்டம் மிகுந்த பெரிய வணிகத் தெருக்களும் இங்கு காணப்பட்டன.வேற்று ஊரிலிருந்து வந்து தங்கி வணிகம் புரியும் வணிகர் நிறைந்த நகராய் சங்க காலத்தில் இது திகழ்ந்தது.

### தகடூர்

தகடூர் அதிகமான்களின் தலைநகராகத் திகழ்ந்தது. தகடூர் நாட்டின் தலைநகர் என்ற பெருமையும் இது பெற்றது. சங்ககாலப் பெண்பாற் புலவர் ஔவையாரால் இது மிகவும் பாராட்டப்பட்டது. இது இன்று தருமபுரி என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. காவல் மிகுந்த நகரமாய் இது இருந்ததை இலக்கியங்களால் அறியலாம். தமிழகத்தில் முதன்முதலாக இங்குதான் கரும்பு பயிரிடப்பட்டது.

**"அமரர் பேணியும் ஆவுதி அளிதிதும்**
**அரும்பெறல் மரபின் கரும்பு இவண் தந்ததும்"**
***(புறநானூறு பாடல்-99வரிகள்:1-2)***
**"அரும் பெறல் அமிழ்தம் அன்ன**
**கரும்பு இவண் தந்தோன் பெரும்பிறங் கடையே"**
***(புறநானூறு பாடல்-392 வரிகள்:20-21)***

## முடிவுரை

புராதன தமிழ் நகரங்கள் தமிழர்களின் நாகரிக முதிர்ச்சியின் வெளிப்பாடாகும். தமிழர்கள், நகரங்களோடு நாகரிகத்தையும், பண்பாட்டையும் வளர்த்தனர். நாகரிகம், பண்பாடு, செல்வவளம், அறிவுமுதிர்ச்சி, பொருளியல் மேம்பாடு, தன்னிறைவு போன்றவற்றின் அடையாளங்களாக புராதனதமிழகநகரங்கள்விளங்கின. மேலும் இந்நகரங்கள் பழந்தமிழரின் வணிகச்சிறப்பை எடுத்துக்காட்டி நிற்கின்றன. தமிழ்நகரங்களின் சிறப்புகளைசங்கஇலக்கியங்கள்சிறப்புடன் பேசுகின்றன. இலக்கியச் செய்திகளை வெளிநாட்டுப் பயணியரின் குறிப்புகள் உறுதிபடுத்துகின்றன. தமிழ் நாகரிகம் "நகர நாகரிகம்" என்று சொல்லுமளவுக்கு புராதன தமிழ் நகரங்கள் சிறப்புற்றிருந்தன. அவற்றை மேல்நாட்டினரும் கண்டு வியந்து பாராட்டிச் சென்றுள்ளனர்.

## குறிப்புகள்

சில ஆய்வாளர்கள் ஆர்க்காடு என்ற பெயரைக் கண்டு இந்நகர் இன்றைய வேலூர் மாவட்டத்திலுள்ள ஆற்காடு என்று கருதுவர். இது ஏற்புடையதன்று. வேலூர் மாவட்டத்திலுள்ள ஆற்காடு பிற்காலச் சோழர் காலத்தைச் சார்ந்ததாகும்.

1. Neelakanta Sastri.,K.A.,Foreign Notices of South India, 2001,Chennai, P:59
2. Indian Journal of History and Science, 2002 P :17 -29
3. Sir Mortimer Wheeler, Rome Beyond the Imperial Frontiers, London,1954, P: 209
4. இராகவன், V.S.V. பிளினி பாளையங்கோட்டை, 1977, ப: 67
5. Srinivasan.C.R.Kanchipuram Through Ages, Delhi, 1979, P:9
6. Nagasamy. R & Abdul Majeeth. A.Vasavasamudram, Chennai, 1978, P:1.

## கருவிநூற் பட்டியல் (Bibliography)

1. Neelakanta Sastri., K.A., Foreign Notices of South India, Chennai, 2001.
2. Indian Journal of History and Science, 2002.
3. Sir Mortimer Wheeler, Rome Beyond the Imperial Frontiers, London,1954 .
4. Natana Kasinathan, Alagankulam, Chennai,1992.
5. Srinivasan.C.R.Kanchipuram Through Ages, Delhi,1979.
6. Nagasamy.R & Abdul Majeeth.A. Vasavasamudram,Chennai,1978.
7. பிள்ளை.கே.கே. தமிழக வரலாறு -மக்களும் பண்பாடும் சென்னை 2013.
8. தமிழ்நாடு வரலாறு-சங்ககாலம், சென்னை, 1983
9. குருமூர்த்தி.சா, தொல்பொருள் ஆய்வும் தமிழர் பண்பாடும், சென்னை, 1974.
10. இராசமணிக்கம்பிள்ளை.ம, பத்துப் பாட்டு ஆராய்ச்சி, சென்னை, 2011.
11. இராகவன்.ஏ.பிளினி, பாளையங்கோட்டை, 1977.